சார்பு நீதிமன்றம். ராசிபுரம்.

எம்சிஓபி.எண். 48/2023 உ/இ.49/2023

2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ம் நாள் மனுதாரர்/ எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியாகிய ம.சா.3 ம் வாக்கு மூலம் 1873-ம் ஆண்டின் 10வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு.எஸ்.பார்த்தீபன், இளநிலை உதவியாளா் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | சி.கே.முருகன் | த/பெ | - | கந்தசாமி |
| ஊர் | - | ஜேடர்பாளையம் | வட்டம் | - | இராசிபுரம் |
| தொழில் | - | நெசவு | வயது | - | 56 |

5.9.2024

முதல் விசாரணை

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்துள்ளதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் காவேரி டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் 5/21 மாரியம்மன் கோவில் அருகில் ஓ.ஜேடர்பாளையம், இராசிபுரம் வட்டம் என்ற விலாசத்தில் நெசவு தொழில் செய்து வருகிறேன். நான் 20 ஆண்டுகளாக தொழில் செய்து வருகிறேன். அங்கு 5 நபர்கள் வேலை செய்கிறார்கள். அந்த விபத்தில் இறந்துபோன கோவிந்தராஜ் என்பவரின் மனைவி விஜயா என்பவர் என்னிடம் 7 ஆண்டுகளாக வேலை பார்த்தார். அவருக்கு மீட்டருக்கு ரூ.6/- வீதம் கூலி கொடுப்பேன். அவர் வாரத்திற்கு கூலியாக ரூ.4500/- முதல் ரூ.5000/-ம் வரை வாங்கி வந்தார். அவர் மாதம் ரூ.18000/- முதல் ரூ.20,000/- வரை பெற்று வந்தார். விபத்தன்று மதியம் 2மணி வரை வேலை பார்த்து விட்டு சென்றார். நான் கொடுத்த சம்பள சான்று சா.சா.ஆ.1 ஆக (ஆட்சேபணையுடன்) குறியீடு செய்யப்படுகிறது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த அஞ்சல் ஒப்புதல் அட்டையில் காவேரி டெக்ஸ்டைல்ஸ் என்று அந்த முகவரியில் குறிப்பிடப்படவில்லை. அதில் சி.கே.முருகன், த/பெ.கந்தசாமி, 5/21 மாரியம்மன் கோவில் என்று தான் உள்ளது. நான் காவேரி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் என்பதற்கு எநன்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. நான் சிறுதொழில் செய்வதை காண்பிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை.சா.சா.ஆ.1 ஆவணம் கணிபொறியில் தட்டச்சு செய்யப்பட்டு ீசவைே டிரவ எடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். விஜயா என்னிடம் வேலை பார்த்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. சா.சா.ஆ.1 ஐ தவிர சம்பளம் வழங்கியதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. காவேரி டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்திற்கு மாதம் ரூ.80000 ம் முதல் ரூ.1,00,000/- வரை வருமானம் வரும். அந்த தொகையில் இருந்து தான் நான் சம்பளம் கொடுக்கவேண்டும். என்னிடம் என்னுடன் சேர்த்து

மொத்தம் 5 நபர்கள் வேலை செய்கிறார்கள். நான் துணி நெய்து கொடுத்ததற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் காவேரி டெக்ஸ்டைல்ஸ் நட்த்தவில்லை என்றும் விஜயா தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவேரி டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில்வங்கி கணக்கு இல்லை. ஆனால் காவேரி என்ற பெயரில் சேமிப்பு கணக்கு உள்ளது. ஒரு நிறுவனத்தின் பெயரில் சேமிப்பு கணக்கு துவங்க முடியாது என்றால் சரியல்ல. நடப்பு கணக்கு தான் துவங்க வேண்டும் என்றால் சரியல்ல. காவேரி டெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுகூனமே இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Sd/- C.K. Murugan

Taken down before/by me in/ open court and read over/ interpreted/
to the witness and acknowledge/ by him/ her to be correct.

Sd/- xxxxxxxxxx.
Sub Judge, Rasipuram.